# பாக்யராஜ் - ஈடு இணையற்ற கலைஞன்!



பதினேழே நாட்களில்
இன்னோர் இடியா?

பாரதிராஜாவைப் புதைத்த
மண்ணின் ஈரம்
இன்னும் காயவில்லை;
அதற்குள் பாக்யராஜுக்குத்
தீ மூட்டுவதா?

என்ன கொடுமை இது!

பாக்யராஜ்
ஈடு இணையற்ற கலைஞன்!

அவிழ்க்க முடியாத முடிச்சுகளைத்
திரைக்கதையில் இட்டு
அதைத் தான்மட்டுமே
அவிழ்க்கத் தெரிந்தவர்!

அவர் உருவம்
குறையென்று கருதப்பட்டது;
அதிலும் வென்றார்

அவர் குரல்
குறையென்று கருதப்பட்டது;
அதிலும் வென்றார்!

நகைச்சுவைக்கென்று
அவர் தனித்தடம் தயாரிப்பதில்லை;

கண்ணின் பாகமான இமைபோல
திரைக்கதையில் நகைச்சுவையை
இழைத்து விடுவார்!

80களில்
தமிழ் சினிமாவை நோக்கிவந்த
ஒவ்வொரு கிராமத்து இளைஞனுக்கும்
நம்பிக்கை கொடுத்தவர்
பாக்யராஜ்!

எம்.ஜி.ஆர். அவரைத்
தன் வாரிசு என்றார்!

பாக்யராஜின்
எதிர்பாராத மறைவு
கலையுலகை அதிரவைக்கிறது!

வாழ்ந்திருக்க வேண்டிய
கலைஞன் அய்யா நீ!

பாதியில்
பயணப்பட்டு விட்டாயே!

உன் உயிர்
அமைதி அடைக!

ஆழ்ந்த இரங்கல்
அனைவருக்கும்!



**கவிப்பேரரசு**
**வைரமுத்து**

## இயக்குநர் பாக்யராஜ் மறைவு!

# சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, ஜீன் 29-

இயக்குநர் பாக்யராஜின் மறைவுச் செய்தியறிந்து அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தி, சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவரது இரங்கல் செய்தி வருமாறு:-

தமிழ்த்திரையுலகின் முன்னணி இயக்குநராக திகழ்ந்த பாக்யராஜ் சார் மறைவுற்ற செய்தியறிந்து வருந்தினேன். வள்ளுவர் கோட்டம் அருகேயுள்ள பாக்கியராஜ் சாரின் இல்லம் சென்று அவரது திருவுடலுக்கு மாலை வைத்து மரியாதைச் செலுத்தினோம். திரைக்கதை மன்னன் என்று போற்றப்பட்டவர். எழுத்தாளர் - பத்திரிகையாளர் - நடிகர் தயாரிப்பாளர் பாடலாசிரியர் இசை அமைப்பாளர் என பன்முகத் திறமையோடு தனி முத்திரைப் பதித்தவர்.

அண்மையில் மறைந்த பாரதிராஜா சாரின் பட்டறையில் இருந்து வந்த அவர், தனது எழுத்தாற்றல் மூலம், குடும்ப உணர்வுகள் சார்ந்த கதைகளை நகைச்சுவையாகவும் - ஜனரஞ்சகமாகவும் காட்சிப்படுத்தினார். எண்ணற்ற அடுத்தத் தலைமுறை படைப்பாளிகளை உருவாக்கிய பெருமையும் பாக்யராஜ் சாரை சேரும். திரையுலகில் 50 ஆண்டுகளை நிறைவு செய்ததற்காக அவருக்கு சமீபத்தில் எடுக்கப்பட்ட விழாவில் பங்கேற்று, கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பாக்யராஜ் சாரின் பெருமைகளைப் பேசினார்கள்.

பாக்யராஜ் சாரை இழந்து வாடும் அவரது துணைவியார் திருமதி.பூர்ணிமா பாக்யராஜ், சகோதரர் சாந்தனு, சகோதரி சரண்யா உள்ளிட்ட அவரது குடும்பத்தாருக்கும், அவருடைய ரசிகர்கள், நண்பர்கள், நலம்விரும்பிகள் அனைவருக்கும் என்னுடைய ஆறுதலையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்த்திரையுலகம் உள்ள வரை பாக்யராஜ் சாரின் புகழ் நிலைத்திருக்கும்.

இவ்வாறு சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## த.வெ.க. அரசின் திட்டத்துக்கு எதிர்ப்பு வலுக்கிறது:

# மாணவர் அடையாள அட்டையில் சாதி விவரங்களை இணைப்பதா?

## ஈரோடு கே.இ.பிரகாஷ் எம்.பி. கண்டனம்!



சென்னை, ஜீன் 29-

ஈரோடு கே.இ.பிரகாஷ் எம்.பி. விடுத்துள்ள கண்டன அறிக்கை வருமாறு:-

தமிழக அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள புதிய ஸ்மார்ட் அடையாள அட்டைகளில் சாதிச் சான்றிதழ் விவரங்களை இணைக்கும் திட்டம் தொடர்பான அறிவிப்பு, மாநிலம் முழுவதும் விவாதத்தையும் எதிர்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

கோபிசெட்டிபாளையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய வருவாய்த்துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன், மாணவர்கள் ஆண்டுதோறும் வருமானம், இருப்பிடம் மற்றும் சாதிச் சான்றிதழ்களைப் பெற அலுவலகங்களுக்கு அலைவதைத் தவிர்க்கும் நோக்கில் புதிய ஸ்மார்ட் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

முதல்கட்டமாக 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும் இந்த அட்டைகளில் மாணவர்களின் தனிப்பட்ட விவரங்களுடன் சாதிச் சான்றிதழ் தொடர்பான தகவல்களும் டிஜிட்டல் முறையில் இணைக்கப்படவுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து, கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகள் கவலை தெரிவித்துள்ளன. கல்வி உதவித் தொகை மற்றும் இடஒதுக்கீடு உள்ளிட்ட நலத்திட்டங்களுக்காக சாதி விவரங்கள் அரசின் தரவுத்தளங்களில் பராமரிக்கப்படுவது அவசியமாக இருந்தாலும், அவற்றை மாணவர் அடையாள அட்டைகளுடன் இணைப்பது சமூக ரீதியாக பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும் என அவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து கருத்து தெரிவித்த ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே. பிரகாஷ், “கல்விச் சலுகைகள் மற்றும் அரசு நலத்திட்டங்களுக்காக சாதி விவரங்கள் தேவைப்படலாம். ஆனால், அவற்றை மாணவர்களின் அடையாள அட்டையுடன் இணைப்பது தேவையற்ற சமூக அடையாளப்படுத்தலுக்கு வழிவகுக்கும். பள்ளிகள் சமத்துவத்தையும் ஒற்றுமையையும் கற்றுத்தரும் இடங்களாக இருக்க வேண்டும்” என்றார்.

மேலும், மாணவர்களிடையே பாகுபாடு, உளவியல் அழுத்தம் மற்றும் சமூகப் பிரிவினை உணர்வுகள் உருவாகும் அபாயம் இருப்பதாக கல்வியாளர்கள் எச்சரித்துள்ளனர். ஏற்கனவே பள்ளிகளில் சாதி அடையாளங்களை வெளிப்படுத்தும் நடைமுறைகளைத் தவிர்க்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், இந்த திட்டம் அதற்கு முரணானதாக அமையக்கூடும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நீதியரசர் சந்துரு குழுவின் பரிந்துரைகள், பள்ளி மற்றும் கல்வி நிறுவனங்களில் சாதி அடையாளங்களை குறைக்கும் நோக்கத்தைக் கொண்டிருந்ததாகவும், தற்போதைய திட்டம் அந்த நோக்கத்துடன் பொருந்துகிறதா என்பது குறித்து அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதற்கிடையில், திட்டத்தின் முழுமையான வழிகாட்டு நெறிமுறைகள் இன்னும் வெளியிடப்படாத நிலையில், அடையாள அட்டைகளில் சாதி விவரங்கள் எவ்வாறு இடம் பெறும் என்பது குறித்தும் பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன.

நிர்வாக வசதிக்காக மாணவர் தகவல்களை டிஜிட்டல் முறையில் ஒருங்கிணைப்பதில் தவறில்லை என்றாலும், சமூக நல்லிணக்கத்தை பாதிக்காத வகையில் திட்டத்தை செயல்படுத்த அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதே கல்வியாளர்கள் மற்றும் சமூக அமைப்புகளின் கோரிக்கையாக உள்ளது.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.

## அமோனியா வாயு கசிந்த விபத்தில்

# சிகிச்சை பெற்றுவந்த மேலும் ஒருவர் உயிரிழப்பு!

## பலி எண்ணிக்கை 16 ஆக உயர்வு!

திருவள்ளூர், ஜூன் 29-

திருவள்ளூர் கன்னிகைப்பேர் கிராமத்தில் இறால் பதப்படுத்தும் தொழிற்சாலையில் கடந்த 21ம் தேதி அமோனியா வாயு கசிவு ஏற்பட்டத்தில் 80க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு சென்னை ராஜிவ்காந்தி மற்றும் ஸ்டான்லி அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

இதில் நேற்று வரை 15 பெண்கள் உயிரிழந்த நிலையில் ஸ்டான்லி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வந்த ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த கபிதா ஜூங்கா(22) என்ற பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதன் காரணமாக அமோனியா வாயு கசிவால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 16ஆக உயர்ந்தது.

உயிரிழந்தவர்களில் 14 சடலங்கள் அவர்களின் சொந்த மாநிலத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் 2 சடலங்களை அனுப்பும் பணிகள் நடைபெற்று வருகிறதாகவும் தமிழ்நாடு சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

அமோனியா வாயு கசிவால் பலியானோர் எண்ணிக்கை, 16ஆக உயர்ந்துள்ள நிலையில் “இறால் பதப்படுத்தும் தொழிற்சாலைக்கு ஒரு வாரத்தில் ‘சீல்’ வைக்கப்படும்,” என திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் கவிதா தெரிவித்துள்ளார்.



ஓட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றியம், ஜம்புலிங்கபுரம் கிராமத்தில் ஸ்ரீ வடக்குவாசல் செல்வி அம்மன் திருக்கோவில் மஹா கும்பாபிஷேக விழாவில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் கலந்து கொண்டார். நிகழ்வில் ஓட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் காசிவிஸ்வநாதன், கோவில்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் நவநீதக்கண்ணன், எப்போதும்வென்றான் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முத்துக்குமார், வடக்கு மாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் முத்துராஜ், வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராதாகிருஷ்ணன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## “ராஜாக்களை” இழந்து தவிக்கும் தமிழ் திரையுலகம்!

# இயக்குநர் பாக்யராஜ் மறைவுக்கு தயாநிதி மாறன் எம்.பி. இரங்கல்!



சென்னை, ஜூன் 29 -

என் இனிய தமிழ்மக்களே என்று அழைத்துக் கொண்டிருந்த வெண்கலக் குரல் வேந்தர் மரியாதைக்குரிய இயக்குநர் பாரதிராஜா அவர்கள் சில நாட்களுக்கு முன்னர் நம்மை விட்டுப் பிரிந்தார், அவரை ஆசானாக ஏற்றிருந்த இயக்குநர் பாக்யராஜ் அவர்கள் தற்போது நம்மை கண்ணீர் கடலில் ஆழ்த்தியுள்ளார்... இது சாதாரண இழப்பல்ல, தமிழ் திரையுலகிற்கு ஏற்பட்டுள்ள தாங்க முடியாத இழப்பு.

தொடர்ந்து ”ராஜாக்களை” இழந்து தவிக்கும் தமிழ் திரையுலகிற்கும், அவரை இழந்து வாடும் அன்னாரது குடும்பத்தினருக்கும், அவரது ரசிகப்பெருமக்களுக்கும், எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தயாநிதி மாறன் எம்.பி. தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## போதைப் பழக்கம்: த.வெ.க. அமைச்சரைக் கண்டித்து

# கழக மாணவர் அணி சார்பில் இன்று ஆர்ப்பாட்டம்!

## கழக மாணவர் அணிச் செயலாளர் ஈரோடு வீரமணி அறிக்கை!

ஈரோடு, ஜீன் 29 -

இதுகுறித்து கழக மாணவர் அணிச் செயலாளர் திருமதி. ஈரோடு வீரமணி அறிக்கை வருமாறு: -

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்கள் கவனத்திற்கு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்கவும் இளந் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும் கழக மாணவர் அணியின் சார்பில், தமிழக வெற்றிக் கழக அமைச்சர் சரத்குமார் அவர்கள் பொதுவெளியில் போதைப் பொருள் உபயோகப்படுத்தியதை கண்டித்து மாவட்டத்தின் பிரதான இடத்தில் இன்று (29.06.2026 - திங்கட்கிழமை) காலை 09.30 மணியளவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக மாணவர் அணி பெருந்திரளாக நிர்வாகிகள் மற்றும் மாணவர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாணவர் அணிச் செயலாளர் திருமதி. ஈரோடு வீரமணி அறிவித்துள்ளார்.

